RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s-22248

OPEN ACCESS

# எட்டுத்தொகை இலக்கியங்களில் பழந்தமிழர் விழாக்கள்

**சு. சீலா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, தேசியக் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி-620001, தமிழ்நாடு, இந்தியா

# Ancient Tamil Festivals in Ettuthogai Literature

**S. Sheela** [a, *]

[a] Department of Tamil, National College (Autonomous), Tiruchirappalli-620001, Tamil Nadu, India

* Corresponding Author: jaiphyrock24@gmail.com

Received: 22.09.2022
Revised: 11-11-2022
Accepted: 13-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

The purpose of conducting festivals is to bring joy, growth and rejuvenation to people's lives by removing fatigue, bringing the human race together and imbuing them with happiness. They appear on the basis of rituals and are influenced by social beliefs and are prevailing among the people. Festivals are a unified set of rituals that are fundamental to a festival. Festivals are celebrated on the basis of faith. There are many Tamil words used by ancient Tamil people to denote festival. Literary evidence suggests that in ancient times festivals were celebrated in Chittoor and Peroor. Festivals were celebrated in the morning and evening. The festivals lasted for several days. The renewed water festival is held in the morning and Kartikai festival in the evening. The ceremonies performed are started on an auspicious day and at an auspicious time. Festivals known through ancirnt Tamil literature can be divided into two categories, festivals related to deities and non-god festivals, such as Panguni Festival, Paavai Festival, and Onam festival, Kaman Festival, Karthikai Festival, Indra Festival, Birthday Festival, Punalatu Festival, Poonthotta Festival, Ulli Festival, Thiruvadhirai Festival, and Sirusotru Festival and so on.

**Keywords:** Tamil literature, Tamil people, Tamil Festival, Rituals

## முன்னுரை

பழந்தமிழ் நாட்டில் மூன்று சங்கங்கள் இருந்தன என்றும் மதுரையிலும் கபாடபுரத்திலும் இருந்த முதல் இரண்டு சங்கங்கள் மறைந்த பிறகு மூன்றாம் தமிழ்ச்சங்கம் மதுரையிலும் அமைந்து நடந்தது என்றும் கருதப்பட்டது இம்மூன்றாம் தமிழ்ச் சங்கத்து நூல்களை எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் என வகுக்கப்பட்டு அவற்றைச் சங்க இலக்கியம் என்று குறிப்பிடப்படும் வழக்கம் ஏற்பட்டது.

சங்க இலக்கியப் பாடல்களில் காதல் பற்றியவை அகம் என்றும் வீரம் புகழ் கொடை போர் முதலிய துறைகளைப் பற்றியவை புறம் என்றும் இரண்டு பிரிவாகப் பகுக்கப்பட்டன சங்க காலத்தில் தோன்றிய நூல்களைச் சங்க இலக்கியம் என்பர் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, என்பன எட்டுத்தொகை நூல்களாகும்.

“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியோடுஅகம் புறமென்று
இத்திறத்த எட்டுத்தொகை”

என்னும் பழம் பாடல் எட்டுத்தொகை நூல்களை சுட்டுகின்றது. எட்டுத்தொகை நூல்களில் கொண்டாடப்படும் விழாக்கள் குறித்து ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இந்திரவிழா

மருதநிலக்கடவுளான இந்திரனுக்காக செய்யப்படும் விழா இந்திர விழாவாகும். சங்ககாலத்தில் இவ்விழாவை மக்கள் கொண்டாடிய செய்தினை ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்றின் மூலமாக அறியப்படுகிறது.

இந்திர விழவிற் பூவி னன்ன

புன்றலைப் பேடை வரி நிழ லகவும்" (Subramaniyan, 2010)

இவ்விழாவை விரிவாக மக்கள் கொண்டாடியதைச் சிலப்பதிகாரம் விளக்குகிறது. சங்ககாலத்தில் மருத நிலப் பொதுமக்கள் இந்திரனை மழைக்கடவுளாக வணங்கி இருக்கலாம்.

## கார்த்திகை விழா

கார்த்திகை மாதத்தில் முழு நிலா நாளில் கார்திகைச் சேரும் நடு இரவில் விளக்கேற்றி வைத்து மக்கள் வழிபட்டதை

"மழைகால் நீங்கிய மாக விசும்பில்

குறுமுயல் மறுநிறங் கிளற மதிநிறைந்து

அறுமீன் சேறு அகலிருள் நடுநாள்

மறுக்குவிளக் குறுத்து மாலை தூக்கிப்

பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய

விழாவுடனயற வருகதில் லம்ம" (Venkatasamy Nattar, 2012)

என்ற அகநானூற்றுப் பாடல் சுட்டுகிறது.

கார்த்திகை திருநாளன்று வாசலிலும் விளக்கேற்றி வைத்து மலர் மாலைகளையும் பூந்தோரணங்களையும் கட்டித் தொங்கவிட்டு மகிழ்ந்துள்ளனர். இத்தீப திருநாளின் போது கோயில்களின் முன்பு சோளத்தட்டை பனை ஓலை போன்றவற்றை குவியலாக்கட்டித்தீயிட்டு எரிபர்.

பின்பு அவ்வாறு எரிந்து போன சாம்பலை எடுத்துச் சென்று தங்கள் நிலங்களில் இடுவர். அவ்வாறு இட்டால் உழவுத் தொழில் நன்கு விளங்கும் என்ற நம்பிக்கையும் தமிழர்களிடம் காணப்பட்டது.

## பங்குனி விழா

பங்குனித் திங்கள் உத்தரமும் நிறைமதியும் கூடிய நன்னாளில் உறையூர் குறுங்காட்டில் உள்ள சோலையில் மக்கள் கூடியிருந்து விழாக் கொண்டாடியதை

பங்குனி முயக்கம் கழிந்த வழி நாள்" (Venkatasamy Nattar, 2012)

என்ற அகநானூற்று வரியின் மூலம் சோழ நாட்டில் மன்னரால் கொண்டாடப்படும் பெரும் விழாவாக இப்பங்குனி விழா நடைபெற்றது என்பதனை உணர முடிகின்றது..

## ஓணவிழா

திருமால் வழிபாட்டை சங்ககால தமிழ் மக்கள் கொண்டியிருந்தனர்,

'மாயோன் மேய காடுறை உலகம்' (Thamizhannal, 2010)

என்ற தொல்காப்பியர் காலத்தில் திருமாலை மாயோன் எனவும் அழைத்தனர் என்ற செய்தி இதன் மூலம் தெளிவாகிறது. திருமாலோடு தொடர்புடைய விண்மீன் திருவோணமாகும். இந்நாளில் கொண்டாடிய விழா ஓண விழாவாகும். இதனை

"கணங்கொள் அவுணர்க் கடந்த பொலந்தார்

மாயோன் மேய ஓண நன்னாள்" (Somasundarar, 2008)

என மதுரைக்காஞ்சி பாராட்டுகின்றது பழந் தமிழ்நாட்டின் பகுதியாகிய சேர நாட்டில் இவ்விழா மலையாள மக்களால் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்நாட்டார் சிறப்பாகக் கருதியதற்குரிய காரணத்தை மூராகபயங்கார் வாமன மூர்த்தியால் மாவலி சக்கரவர்த்தி பாதாளத்தில் வீழ்த்தப்பட்ட போது தான் ஆட்சி செலுத்திய உலகை ஆண்டுக்கு ஒரு முறை வந்து கண்ணுற்று மகிழ அம்மூர்த்தியிடம் அவன் வரம் வேண்டிப் பெற்றனர் என்றும் அவன் வந்து காணும் திருநாளே ஓணம் ஆகும்.

## பாவை விழா

சங்ககாலத்தில் திருமணம் ஆகாத மகளிர் தமக்கு ஏற்ற சிறந்த கணவர் கிடைத்தற் பொருட்டு மார்கழி மாதத்தில் நோன்பு இருந்து நீராடி வணங்குவர். இதனை

'தை இத் திங்கள் தண்கயம் படியும்

பெருந்தோள் குருமகள்' (Narayanasamy Iyer, 2007)

என்ற நற்றினை பாடலும்

'தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ' (Subramaniyan, 2010)

என்ற கலித்தொகை பாடலும் சுட்டுகின்றன.

## திருவாதிரை விழா

திருவாதிரை நிறைமதி நாளில் ஆகமங்களைப் பயின்ற அந்தணர்கள் சிவபெருமானுக்கு விழாத் தொடங்கி நடத்தியதை

'ஞாயிறு காயா நளி மாரிப் பிற்குளத்து

மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை

விரிநூல் அந்தணர் விழவு தொடங்க' (Makkikanar, 1999)

என்ற பாடல் செய்தியினை பரிபாடல் சுட்டுகின்றது.

## வெறியாட்டு விழா

பண்டை நாளில் பெருவழக்காக இருந்தது வெறியாட்டு விழாவாகும். முருகனுக்காக எடுக்கப்பட்ட இவ்விழாவில் வேலன்கையில் வேலேந்தி ஆடுவான். இன்னிசைக் கருவிகள் முழக்கப்படும். தினை அரிசியையும், மலர்களையும் தூவுவர். ஆட்டுக்கிடாவை அறுத்து குருதியைச் சிந்துவர். இவ்விழாவைப்பற்றிய முழு விவரமும் திருமுருகாற்றுப்படையில் இடம்பெறுகின்றது. ஊர் தோறும் இவ் விழாவினைக் கொண்டாடினர். என்பதனைச்

'சிறு தினை மலரோடு விரைஇ மறியறுத்து

வாரணக் கொடியோடு வாயிற்பட நிறீஇ

ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்'

என்னும் திருமுருகாற்றுப்படைப் பகுதியால் அறியலாம்.

## நீராடல் விழா

நீராடல் விழா நெய்தல் நிலத்து பொதுமக்களாகிய பரதவர்கள் புனித நீராடினால் தாங்கள் செய்த பாவங்கள் நீங்கும் என்று நம்பி சிறை சுறவின் கோடு நட்டு வணங்கிப் பின் காவிரி கடலோடு கலக்கும் இடத்தில்

"தேறுநீர்ப் புணரியோடு யாருதலை மணக்கும்

மலியோதத் தொழி கூடற்

தீதுநீங்கக் கடலாடியும்

மாசுபோகப் புனல்படிந்து"

நீராடியதைக் கடலூர் உருத்திரங் கண்ணனார் பட்டினப்பாலையில் விவரிக்கின்றார். வையியில் நீராடச் சென்ற மதுரை நகரத்து மக்கள் நீர்வளம் பெருக வேண்டி நத்தை நண்டு, இறவு வாலை மீன் என்பனவற்றை நீரில் இட்டு நாடு விளைவதாக உலகம் பொலிவதாக என்று வாழ்தியத்தை

'நத்தொடு நள்ளி நடையிறவு வயவாளை

வித்தி யலையில் விளைக பொலிகென்பார்'

என்று பரிபாடல் சுட்டுகின்றது. பாவங்கள் போக்கவும் வளம்வேண்டியும் மக்கள் புனித நீராடும் பழக்கம் இன்று மக்களிடையே இருந்து வருவதைக் காணலாம்.

## பிறந்தநாள் விழா

சங்க காலத்து மன்னர்களின் பிறந்த நாளை விழாவாகப் பொது,மக்கள் கொண்டாடி உள்ளது மக்களுக்கும் மன்னனுக்கும் இருந்த நெருங்கிய உறவு நிலையை வெளிப்படுத்துகிறது.மன்னனது பிறந்தநாளை மக்கள் கொண்டாடியதை மதுரைக்காஞ்சி

'பேரிசை நன்னன் பெறும் பெயர் நன்னாள்

சேரி விழவின் ஆர்ப் பெழுந் தாங்கு'

என்ற பாடல் வரிகளால் புலப்படுத்துகின்றது.இப்பிறந்தநாள் விழாவை வெள்ளணி விழா என்று அழைப்பர். வெள்ளணி நாள் குறித்து நச்சுனார்க்கினியர்

'மங்கள வண்ணமாகிய வெள்ளணியும் அணிந்து

கண்ணும் அருளே நிகழ்தலின் அதனை வெள்ளணி என்க'

என்று பொருள் கூறுகிறார்'

வெள்ளை நிற ஆடை அணிவது மங்களம் குறிப்பதாக எண்ணியதால் இவ்வாறு செய்தனர்.

## பூந்தொடை விழா

இவ்விழா மறவர்கள் மத்தியில் உருவானதாகும். இவ்விழா குறித்து உரையாசிரியர்

'மறவர் மக்கள் முதல் முதலாக அம்பு தொடுத்தல் பொருட்டு நிகழ்த்தும் திருவிழா என்று விளக்கம் தருகிறார்" (Gandhi, 1981).

சங்க இலக்கியத்தில் இவ்விழா குறித்து ஓரிடத்தில் மட்டுமே குறிப்பு காணப்படுகிறது. பிற்கால இலக்கியங்களிலும் இவ்விழா பற்றிய குறிப்பு வருவதாகத் தெரியவில்லை.அகநானூறு

"வார் கழல் பொழிந்த வன்கண் மழவர்

பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன

தருமணல் ஞெமிரிய திருநாள் முற்றம்"

என்று கூறுவதன் வாயிலாக மறவர்களின் கலை பயிற்சி ஆரம்ப நிலையில் கொண்டாடப்பட்ட விழாவாக தோன்றுகிறது.

## உள்ளி விழா

கொங்கு நாட்டு மக்கள் கொண்டாடுகின்ற விழாக்களில் ஒன்று உள்ளி விழாவாகும்.

"எவன்கொல் வாழி தோழி கொங்கர்

மணியரை யாத்து மறுகின் ஆடும்

உள்ளி விழவின் அன்ன

அலரா கின்றது பலர்வாய்ப் பட்டே" (Subramaniyan, 2010)

என்பது இவ்விழா எதற்காக கொண்டாடப்பட்டது என்பதற்கு பாடலில் எவ்வித குறிப்பு இல்லை. கொங்கு நாட்டைச் சார்ந்த மக்கள் **ஒலி**க்கின்ற மணியை இடையில் கட்டிக்கொண்டு தெருவில் ஆடி மகிழ்ந்து வருவது தான் உள்ளி விழாஎன்பதாகும்.

## சிறுசோற்று விழா

இவ்விழா குறித்து புறநானூறு

'வாயின் மாடந்தொறு மைவிடை வீழ்ப்ப

நீயாங்குக் கொண்ட விழவினும் பலவே'

என்று கூறுகிறது. சோற்றை தயிர் முதலானவற்றோடு கலந்து உருண்டைகளாக்கிஅவற்றை வருவோர் ஒவ்வொருவருக்கும் கொடுத்து வழங்குவது இவ்விழாவாகும்.

## காமன் விழா

சங்க காலத்தில் இவ்விழாவை வேனிற் காலத்தில் நிகழ்த்தினர் ஆடவரும்,பெண்டிரும்இன்பப் பொழுதுபோக்கு விழாவாகக் கொண்டனர்.இக்காமனை மன்மதன்,காமவேள், வேணிவான் என்று அழைத்தனர்.இவ்விழாக்காலத்தில் பரத்தையருடன் கூடியாடியதை

'ஊறலியாம் ஒளி வாட உயர்ந்தவன் விழவினுள்

விறலிழை யவரோடு விளையாடுவ்வான் மன்னோ' (Makkikanar, 1999)

என்றும் இளவேனிற் காலத்தில் விழா எடுத்து மகிழ்ந்ததை,

'இருங்குயி லாகப் பெருந்துறை கவின்பெறக்

குழவி வேனில் விழவெதிர் கொள்ளுங்

சீரார் செவ்வியும் வந்தன்று'

கலித்தொகை பாடல் புலப்படுத்துகின்றன. இவ்விழா இன்றைய நாளிலும் வேநீர் காலத்தில் நிகழ்த்த பெறுவதையும் காணமுடிகிறது..

இவ்வேனிற் விழாவினை பற்றி சிலப்பதிகாரம் நமக்கு எடுத்துக்காட்டுகின்றது. சித்திரை நிறைமதி நாள் கழிந்த பின் காவேரி பூம்பட்டினத்தை விட்டு புறப்பட்ட கோவலனும் கண்ணகியும் வழியிடை கண்ட கவுந்தியடிகளுடன் மதுரை மாநகர் நோக்கி செல்கின்றார்கள். அவர்கள் புகாரியிலிருந்து மதுரை சென்று சேர இரண்டு திங்களுக்கு மேலாகின்றன சித்திரையில் கானல்வரி பாடப்படுகின்றது. ஆகவே இடைப்பட்ட வைகாசியும் ஆணியும் அவர்கள் வழிநடைக் காலமாகும்.அந்த வெம்மையில் பாவம் அம்மூவரும் நடந்து செல்லும் நிலை இளங்கோவடிகளது துறவுள்ளத்தையும் தொடுகின்றது. வேனில் கொடுமையை அவர்

"கடுங்கதிர் திருகலின் நடுங்கஞர் எய்தி

ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்ப

நறும்பல் கூந்தல் குறும்பல உயிர்த்தாங்கு

ஐயை கோட்டத்து எய்யா ஒருசிறை

வந்து நோய் தணிய இருந்தனர்"

என்று காட்டுகின்றார்.

## முடிவுரை

சங்க இலக்கியங்களின் வாயிலாக பழந்தமிழரின் நம்பிக்கைகள் விழாக்கள் ஆகியவற்றை அறிய முடிகிறது. பண்டைத் தமிழகத்தில் விழாக்களுக்கு பஞ்சமில்லை என்றும் கூறலாம். விழாக்கள் மனித சமுதாயத்தில் நம்பிக்கையின் காரணமாகவே தோன்றியிருக்கின்றன. மனிதனது சிந்தனை கொண்டு மீலியல்பு ஆற்றல்களுக்கு காரணம் காண இயலாத நிலை ஏற்படும் போது மனம் சில செயல்பாடுகளை நிகழ்த்துகிறது. அந்நிலையில் பண்டை சமுதாயங்களிடையே மரபாக விழாக்கள் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்விழாக்கள் சமுதாயம் சார்ந்தனவாகவும், சமயம் சார்ந்தனவாகவும் பகுக்கப்பட்டுள்ளன. சமய விழாக்களான கார்த்திகை விழா, பாவை விழா, ஓணவிழா, இந்திர விழா, பங்குனி விழா, திருவாதிரை விழா, போன்ற விழாக்கள் மரபுகளாக பின்பற்றப்பட்டவை ஆகும்.பழந்தமிழரின்வாழ்க்கையை பண்படுத்திக் கொள்ளவும், உயரிய நெறிகளை பின்வரும் சமுதாயத்திற்கு அறிவுறுத்தும் வகையில் அமைந்திருப்பதை உணரலாம்.

## References

Gandhi, K. (1981) Thamizhar Pazhakka Vazhakkangalum Nambikkaigalum, International Institute of Tamil Studies, Chennai, India

Makkikanar, A. (1999) Paripadal Moolamum Uraiyum, Varthaman Pathippagam, Chennai, India.

Narayanasamy Iyer, A. (2007) Natturai Moolamum Uraium, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Somasundarar, P. (2008) Maduraikanchi, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India

Subramaniyan, S.V. (2010) Sanga Ilakiyath Thoguthi, Manivasam Pathippagam, Chennai, India

Thamizhannal, (2010) Tholkappiyam, Manivasakar Pathippagam, Chennai, India

Venkatasamy Nattar, N.M. (2012) Agananooru Moolamum Uraiyum, Saratha Pathippagam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License